1974 சனவரி 29]

Veterinary clinics in Kanyakumari district.

* 232 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the total number of Veterinary Clinics functioning in Kanyakumari district ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒன்று.

First-aid centres for cattle

* 233 Q.—THIRU K. N. KUMARASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any scheme for the establishment of first-aid centres in each block to prevent contagious cattle diseases is pending with the Government?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

Agro-Engineering Service Societies in Tiruttani taluk.

* 234 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any Agro-Engineering Service Society has been formed in Tiruttani taluk; and

(b) if so, the functions of the Society ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம், இரண்டு.

(இ) டிராக்டர்கள், ஆயில் இன்ஜின்கள், பம்ப் செட்டுகள் இவைகளைப் பழுது பார்ப்பது முக்கியமான வேலையாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, திருத்தணி, திருவாலங்காடு ஆகிய இடங்களில் அக்ரோ இன்ஜின் சர்விஸ் சென்டர் சொசைட்டி உருவாக்கி இருக்கிறார்கள். இன்னும் அந்தச் சங்கங்கள் செயல்படத் துவங்கவில்லை. அதற்குப் போதுமான நிதி வசதி உடனடியாக அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் இரண்டு என்று சொன்னது ஒன்று திருத்தணி, மற்றொன்று திருவாலங்காடு. அதற்கு நிதி வசதி மத்திய அரசிடமிருந்து வருகிறது. மத்திய அரசாங்கத்திடமிருந்து பூரா பணமும் வந்து சேரவில்லை. ஒரு சென்டருக்கு ரூ. 50,000 தருவதாக அவர்கள் ஒப்புக்கொண்டு பணம் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருக்கிறது. பூரா பணமும் வந்தவுடன் நன்றாக விரிவுபடுத்தப்படும்.